**வலபனே பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலபனே பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்கான உப அட்டவணையில் ரூபா 2,088,896 பெறுமதியான 49 அலுவலக உபகரணங்கள் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 641,222 பெறுமதியான 12 இயந்திர உபகரணங்கள் அலுவலக உபகரணங்களுக்கான உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 437,585 பெறுமதியான திரைச்சீலைகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக தீர்மானிக்கப்பட்ட முற்பணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் 2019 திசெம்பர் 31ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அப் பெறுமதி செலவாக கணக்கீடு செய்யாமை காரணமாக மீளாய்வாண்டில் செலவு ரூபா 1,675,275 ஆல் குறைத்தும் தீர்வு | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| செய்யப்படாத முற்பண வைப்பு அப் பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) நிதிக் கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் வழங்கப்பட வேண்டிய சம்பளமாக முன்வைக்கப்பட்டிருந்த இருப்பு ரூபா 101,272 பொது வழங்கல் கடன் கொடுத்தோர் மீதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (v) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய கடைகளுக்கான வாடகை ரூபா 92,988 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (vi) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய கழிவறைக்கான வரிப்பணம் ரூபா 65,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (vii) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் முன்னராக பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 135,087 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறப்படவேண்டிய ஏனைய வருமானக் கணக்குகளின் மீதி ரூபா 5,685,247 என்றாலும் அட்டவணையின் பிரகாரம் அம் மீதி ரூபா 5,765,249 ஆக இருந்தமையால் ரூபா 80,002 வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை இணங்கண்டு திருத்தங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**(இ) பெற வேண்டிய கணக்குகள் பற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய கணக்கு மீதி 3 இன் பெறுமதி ரூபா 19,203,072 ஆக இருந்ததுடன் அதில் ரூபா | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 2,286,515 ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது. | | |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் மதிப்பு ரூபா 19,234,108 ஆக இருந்தாலும் அதில் ரூபா 7,623,695 ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கேள்வி வைப்பிற்கான கணக்கு ரூபா 1,531,848 இல் ரூபா 1,131,848 மீதிக்கான அட்டவணை முன்வைக்கப்படவில்லை. | அட்டவணையை நாளதுவரையாக்கல் | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 1987 இன் 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| (i) இலக்கம் 126 (III) ஆம் உப பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து உப விதிகளை விதித்து அதன் வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 219 ஆம் பிரிவு | வலப்பனை பொதுச் சந்தையின் 62/2 ஆம் இலக்க கடை சபை உறுப்பினர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | சபைக்குச் சொந்தமான இடம் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படவில்லை. | உரிய விதிகளின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் | கருத்துரை வழங்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,674,486 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,776,520 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,653,000 | 2,655,527 | 1,745,002 | 1,964,781 | 2,004,754 | 2,024,849 | 1,423,662 | 1,688,108 |
| (ii) | வாடகை | 7,411,000 | 7,891,932 | 5,790,812 | 5,315,732 | 5,896,410 | 4,949,690 | 4,424,978 | 3,487,067 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,857,000 | 3,630,163 | 3,630,163 | - | 3,615,000 | 3,487,058 | 3,487,058 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,055,000 | ,692,433 | 38,646 | 5,669,687 | 7,197,639 | 5,279,508 | 5,235,658 | 224,895 |
| | | 20,976,000 | 20,870,055 | 11,604,623 | 12,950,200 | 18,713,803 | 15,741,105 | 14,571,356 | 5,400,070 |

#### 2.2.2 வருமானம் வசூலித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு எடுத்திருந்த 06 | நிலுவைப் பணம் அறவிடப்பட | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | |
|---|---|
| வாடகையாளர்கள் 12 மாதங்கள் முதல் 71 மாதங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து வாடகை செலுத்தாது புறக்கணித்திருந்ததுடன் அந் நிலுவைப் பணத்தைப் பெற போதிய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் அந்த நிலுவை ரூபா 1,070,360 ஆகும். | நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 334,718 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 5,825,737 ஆன காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தன. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 2.2.4 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 29,975 தொகை அறவிடுவதற்கு இருந்தது. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் தொடர்பாக பிரதேச சபை போதியளவில் அறிந்திராதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக குறித்த பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அதன் பிரகாரம் திட்டமிடப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தும்பேகெலே கழிவுப் பொருள் நிலையத்தின் அபிவிருத்திக்காக 2018 சனவரி 09 ஆந் திகதி ரூபா 14,948,080 பெறுமதியான உடன்படிக்கைககு வந்திருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரை குறித்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வலப்பனை பொதுச் சந்தையில் அமைந்துள்ள 16 கடைகளுக்கான மதிப்பீடு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப் படாமையினால் 2019 செப்தெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து திசெம்பர் 31 வரையான காலத்திற்கு சபை நிதியத்திற்கு ரூபா 78,750 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் 05 விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சிய செலவினங்களுக்காக பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 14 இன் பிரகாரம் குறைநிரப்பு செலவின மதிப்பீட்டை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சும் போது நிதி மற்றும் நிர்வாக விதியின் பிரகாரம் குறைநிரப்பு செலவின மதிப்பீடு அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாகம் விதி 193 இன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்டநிதிஏற்பாட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே ஏற்பட்டிருந்த வேறுபாடுகள் தொடர்பான விடயங்களை விளக்கும்கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |